DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. -156/2025

Prosecution PW -3

| | | |
|---|---|---|
| Name | கார்த்திகேயன் | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 10.01.2026 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused absent. 355 BNSS petition filed and allowed.

முதல் விசாரணை

நான் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தஞ்சாவூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 08.03.2019 ஆம் தேதி மெலட்டூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளரா பணியில் இருந்தபோது, என் ரகசிய தகவலாளி போன் மூலம் மேலகளக்குடி கொத்தங்குடி பாலம், வெண்ணாற்றங்கரை தெற்கு பகுதியில் களக்குடி - களஞ்சேரி செல்லும் தார்சாலையில் ஒரு நபர் கஞ்சா வைத்திருப்பதாக கூறிய ரகசிய தகவலின் அடிப்படையில் சிறப்பு உதவி ஆய்வாளர் சிவக்குமார், தலைமை காவலர்கள் மனோசேகர், ஆசைத்தம்பி ஆகியோருடன் மெலட்டூர் காவல் சரக மேலகளக்குடி கொத்தங்குடி பாலம், வெண்ணாற்றங்கரை தெற்கு பகுதியில் களக்குடி - களஞ்சேரி செல்லும் தார்சாலையில் சென்று கண்காணித்தபோது மேற்கு இருந்து கிழக்கு நோக்கி வந்த ஒருஆண் நபர் கட்டை பையை முதுகு பக்கமாக வைத்துக்கொண்டு சந்ததேகத்திற்கு இடமாக நடந்து வந்தார். போலிசாராகிய எங்களை கண்டதும் அந்தநபர் அந்த இடத்திலேயே அவர் கொண்டுவந்த கட்டைபையை கீழே போட்டுவிட்டு அருகில் ஒடிமறைந்துவிட்டார். பின்னரஅவர் போட்டுவிட்டு சென்ற கட்டைடைபையை எடுத்து நான் எடுத்து சோதனை செய்தபோது தமிழ்நாடு அரசால் தடைசெயப்பட்ட கஞ்சா என்னும் போதைப்பொருள் இருந்தது. அதை அருகில் இருந்த தமிழ்நாடு நுகர்ப்பொருள் வாணிப கழகத்தில் இருந்த தராசில் எடைவைத்து பார்த்தபோது 6.000 கிலோ கஞ்சா இருந்தது. அதில் 5.900 கிராமை அதே கட்டைபையில் வைத்து SHO சீல் வைத்தும், 100 கிராம் கஞ்சாவை தலா இரண்டு 50 கிராம் ஆக இரண்டு காக்கி பேப்பரில் மடித்து SHO சீல் வைத்து கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்ற வெளி நபர் சாட்சிகள் யாரும் வராததால் போலிசாராகிய ஆகிய சிறப்புஉதவி ஆய்வாளர் சிவக்குமார் தலைமை காவலர்

மனோ சேகரும் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.1.ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் தலைமறைவான எதிரியை குறித்து விசாரிக்கும்போது மாரியம்மன் சாலிய குளக்கரை சேர்ந்த கோவிந்தராஜ் மகன் கிருஷ்ணமூர்த்தி என்கிற பன்னி கிருஷ்ணமூர்த்தி என தெரியவந்தது. பின்பு வழக்கின் தடயப்பொருளான 6.000 கிலோ கஞ்சாவுடன் அன்று மாலை மெலட்டூர் காவல் நிலையம் வந்து 19.00 மணிக்குநிலைய குற்ற எண். 18/2019 பிரிவு 8(c), 20(b)(ii)(B) of NDPS Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ-2. பின்னர் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன்.

<u>குறுக்கு விசாரணை எதிரி தரப்பில்</u>

சம்பவ இடத்தில் அனைத்து நடவடிக்கைகளையும் முடித்து நிலையம் வந்துதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். எனக்கு வந்த ரகசிய தகவலை எழுத்துமூலமாக பதிவு செய்து மேல் அதிகாரிக்கு அனுப்பவில்லை என்றால்சரிதான். அ.த.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகசரில் குற்ற எண், சட்டப்பிரிவுககள் குறிப்பிடப்பட்டுள்ளதுள என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் 6 கிலோ கஞ்சா செடி என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மாதிரி தடயம் எடுத்ததாக கைப்பற்றுதல் மகசரில் குறிப்பிடவில்லை. தடயத்தை கைப்பற்றும்போது எதிரியின் பெயர் தெரியாது என்றால் சரிதான். ஆனால் கைப்பற்றுதல் மகசரில் எதிரியின் பெயரை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சொன்ன நேரம் நாள் எந்த தகவலும் வரவில்லை என்றாலும், எந்த தடய பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் தடய பொருட்களும் காவல் நிலையத்தில் பின்னிட்டு தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

(ஒ/ம்-G.சுந்தரராஜன், B.Sc., B.L.,)

கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்